பொது நிருவாகச் சுற்றறிக்கை : 26/2017(VII)

எனது இலக்கம் : Pns/P4/W&OP/F11
பொது சேவை, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.08.10

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்களுக்கு பழைய இல. 82/83 மற்றும் M/F வகுதிகளின் கீழ் பதிவு செய்த பழைய அங்கத்தவர்களை, இணைய வழித் திட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்தல்**

மேற்படி விடயம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் தொடர்பில் உங்கள் அவதானத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

I. 2017.10.12 ஆம் திகதிய 26/2017 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை
II. 2018.03.29 ஆம் திகதிய 26/2017(I) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை
III. 2018.05.03 ஆம் திகதிய 26/2017(II) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை
IV. 2018.08.02 ஆம் திகதிய 26/2017(III) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை
V. 2018.11.15 ஆம் திகதிய 26/2017(IV) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை
VI. 2021.02.10 ஆம் திகதிய 26/2017(V) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை
VII. 2021.08.05 ஆம் திகதிய 26/2017(VI) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை

இச்சுற்றறிக்கைகளில் 2021.08.05 ஆம் திகதிய 26/2017(VI) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், அதற்குப் பதிலாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. அச்சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 82/83 மற்றும் M/F வகுதிகளின் கீழ் விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இணைய வழியில் மீண்டும் பதிவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த இறுதித் திகதியை 2021.12.31 ஆம் திகதி வரை நீடிக்கிறேன்.

03. இது தொடர்பில் 2021.12.31 ஆம் திகதியின் பின்னர் செய்யப்படும் கோரிக்கைகள் மற்றும் பழைய விதவைகள் அநாதைகள் இலக்கங்கள் நிராகரிக்கப்படும் என்பதனால், உங்களின் கீழ் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் முறையாக அறிவித்து உரிய திகதியில் பதிவு செய்த செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவை, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு